**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**
**முன்னிலை : திரு M. சந்திரமோகன்., B.A., B.L.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி
திருவள்ளுவர் ஆண்டு 2056 விசுவாவசு வருடம் கார்த்திகைத் திங்கள் 18–ம் நாள்
2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04–ம் நாள் வியாழக்கிழமை
******

**அசல் வழக்கு எண். 209/2018–ல் இடைமனு எண்.6/2025**

ரவிச்சந்திரன் .....மனுதாரர்/2ம் பிரதிவாதி

...எதிர்....

1. அன்னபூரனி (இறந்தார்)
2. ராஜதுரை
3. சின்னதுரை
4. பரமேஸ்வரி
5. கோபாலகிருஷ்ணன்
6. கார்த்திகேயன்
7. ராஜலெட்சுமி
8. வேம்பரசி
9. நளமகாராஜன் ...எதிர்மனுதாரர்கள்/வாதிகள்

10. மணிகண்டன்
11. செல்வகுமார் ...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 01.12.2025 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. R.சேயோன் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. S.முத்துக்குமார் அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரையைக் கேட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரையில் என்னுடைய பரிசீலனையில் வைக்கப்பட்டிருந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்

**உத்தரவு**

கடந்த 09.09.2025ல் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி கெடு போடப்பட்டிருந்த நிலையில், வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.04 18:36:21 +0530

செய்யாததால் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டதை, Re open செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/2ம் பிரதிவாதியால் இம்மனு உ.வி.மு.ச. 151–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. மனுவின் சுருக்கம்**

(i) மனுதாரர் அசல் வழக்கில் 2ம் பிரதிவாதி ஆவார். அசல் வழக்கானது 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால், மனுதாரர்/2ம் பிரதிவாதி மற்றும் 10,11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்குத் தொடர்ந்து விசாரணைக்கு வந்து, கடந்த 02.07.2025 முதல் வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்ய வேண்டி கெடு போடப்பட்டிருந்த நிலையில், 09.09.2025 அன்று வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால் வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது. இந்நிலையில் இம்மனுவானது வாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இம்மனுவை அனுமதிக்காவிடில் மனுதாரர்/2ம் பிரதிவாதிக்கு ஏராள நஷ்டமும் கஷ்டமும் ஏற்படக்கூடும். எனவே வாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை அனுமதிக்க வேண்டும்.

**2.** எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

**இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை**

3. மனுதாரர்/2ம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கதக்கதா?

4. இம்மனுவில் மனுதாரர்/2ம் பிரதிவாதி மற்றும் எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

**5. தீர்வு:**

(i) இருதரப்பு வாதமும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.04 18:36:26 +0530

செய்யப்பட்டது. அசல் வழக்கானது 1 முதல் 9 எதிர்மனுதாரர்கள்/வாதிகளால், மனுதாரர்/2ம் பிரதிவாதி மற்றும் 10,11 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. கடந்த 02.07.2025 முதல் 09.09.2025வரை வா.சா.3 குறுக்கு விசாரணைக்காக கெடு போடப்பட்டு, வா.சா.3 ஐ குறுக்கு விசாரணை செய்யாததால் 09.09.2025 அன்று வாதிகள் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டதையடுத்து, வாதிகள் தரப்பு சாட்சியத்தை Re open செய்து உத்தரவிடக்கோரி மனுதாரர்/2ம் பிரதிவாதியால் இம்மனு உ.வி.மு.ச. 151–ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

எதிர்மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் எதிருரை இல்லை என்று மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

(ii) அசல் வழக்கில் வாதிகள் தரப்பில் சாட்சிய விசாரணை முடிக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பு சாட்சிய விசாரணைக்காக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இருப்பினும், வாதிகள் தரப்பு சாட்சியத்தை Reopen செய்வதற்கு மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நியாயமானதாகவும், ஏற்றுக்கொள்ள கூடியதாகவும் உள்ளது. இதனால் வழக்கின் விசாரணை எந்த விதத்திலும் பாதிக்கப்படுவதில்லை. இம்மனுவை அனுமதித்தால் எதிர்மனுதார்களுக்கு எவ்விதமான பாதிப்பும் ஏற்பட போவதில்லை. மேலும் இது விசாரணை நீதிமன்றமாக இருப்பதால் தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பு கொடுத்து அதன் பின் வழக்கில் தீர்வு காண்பதே நீதியின் நலனுக்கு உகந்தது என்று கருதி மனுதாரர் தாக்கல் செய்துள்ள இம்மனுவை அனுமதித்து உத்தரவிடுவது என்று முடிவு செய்து அவ்வாறு இம்மனுவின் பிரச்சனைக்கு தீர்வு காண்கிறது.

**இறுதியில்,** இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால்

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.04 18:36:31 +0530

சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 04–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.04 18:36:36 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

| | |
|---|---|
| மனுதாரர் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |
| எதிர்மனுதார்கள் தரப்பு சாட்சிகள் | – இல்லை – |
| எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள் | – இல்லை – |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2025.12.04 18:36:41 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**நேரிய/வரைவு உத்தரவு**
அசல் வழக்கு எண்.209/2018ல்
இடைமனு எண்.6/2025
நாள்.04.12.2025